**செய்தி வெளியீடு எண்:254** **நாள்:09.06.2021**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் திரு. த. மனோ தங்கராஜ் அவர்கள் தலைமையில் தமிழகத்திலுள்ள தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுடன் காணொலி வாயிலாக கலந்தாய்வுக் கூட்டம் இன்று (09.06.2021) தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாண்புமிகு தமிழக முதல்வரின் செயல்திட்டங்களுக்கு முழு வடிவம் கொடுக்கும் வகையில் உலகளாவிய நிறுவனங்களை (Global Giants) தமிழகத்திற்கு கொண்டு வருவதற்கான செயல்திட்டங்கள், தகவல் தொழில்நுட்பவியல் துறையில் வேலைவாய்ப்புகளை கிராமப்புற இளைஞர்களுக்கு உருவாக்கித் தருதல், தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் செயல்பாடுகளை தமிழகத்தின் இரண்டாம் நிலை நகரங்களுக்கும் விரிவுபடுத்துதல், வேலைவாய்ப்புகளுக்குத் தேவையான திறன்களை மாணவர்களிடம் உருவாக்குதல், தகவல் தொழில்நுட்பத்தில் புதிய முயற்சிகளை ஊக்குவித்தல், தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு ஊக்குவிப்பு (ease of doing business) அளிப்பதற்கான கொள்கை செயல்பாடுகள், வீட்டிலிருந்தே வேலை செய்வதை (Work From Home) ஊக்குவிக்கும் வகையில் தகவல் தொழில்நுட்பக் கட்டமைப்பை உருவாக்குதல், SaaS, FINTech போன்ற துறைகளில் தமிழகம் முன்னணியில் இருப்பதை உறுதிப்படுத்துதல், புதிய தொழில் முனைவோருக்கான (Start-ups) அரசின் ஊக்குவிப்பு முயற்சிகள் போன்றவை விவாதிக்கப்பட்டன.

தகவல் தொழில்நுட்பவியல் துறையின் முதன்மைச் செயலர் திரு. நீரஜ் மித்தல், இ.ஆ.ப., எல்காட் நிறுவன மேலாண்மை இயக்குநர் திரு. டி. இரவிச்சந்திரன், இ.ஆ.ப., இன்போசிஸ், டி.சி.எஸ், காக்னிசன்ட், விப்ரோ, சதர்லேண்ட், அக்சஸ் ஹெல்த் கேர், பினான்சியல் சாப்ட்வேர் சிஸ்டம்ஸ், கேப்ஜெமினி, டெக்மஹிந்திரா, ஹெக்சாவேர், அடோஸ் சின்டல், ஹெச்.சி.எல்,

சோஹோ போன்ற நிறுவனங்களின் முதன்மை செயல் அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**